



# பரலோகத்திற்குச் செல்லும் பாதை

"என்னாலேயல்லாமல் ஒருவனும்
(பரலோகத்திலிருக்கும்) பிதாவினிடத்தில்
வரான்" என்றார் இயேசு யோவான் 14:6

*Paralogathirkku Sellum Pathai*
(Tamil)

The Way to Heaven
© Malaysia Faith Mission
First Tamil Edition 1996
Reprint 2007

Acknowledgement:
All pictures are copies from the Revised English Text - 1990

OM Authentic Books is an imprint of OM Authentic Media, the publishing division of STL OM Books India.

Published by
OM Authentic Books
P. O. Box 2190
Secunderabad 500 003
Andhra Pradesh, India.

இந்த புத்தகம் ***பரலோகத்திற்கு செல்லும் பாதை*** பற்றிய கூடுதல்
விபரங்கட்கு அணுக வேண்டிய முகவரி :

This booklet is sponsored by CCMI

## பொருளடக்கம்

**தேவனின் அன்பு** — பரலோகம் பரிசுத்தம் 4-5
யோவான் 3:16

**பாவம்** — பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது - நரகம் 6-7
ரோமர் 3:23

**கிறிஸ்துவின் மரணம்** — பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுதல் - மன்னிப்பு 8-11
1 கொரிந்தியர் 15:3-4, 1 யோவான் 1:9,7

**ஏசுவை ஏற்றுக்கொள்ளுதல்** — நித்திய வாழ்வு — இரட்சிப்பு 12-13
வெளிப்படுத்தின விசேஷம் 3:20

**வளர்ச்சி** — வேதம் வாசித்தல்-ஜெபித்தல் 14-17
- ஆலயத்திற்குச் செல்லுதல் - கீழ்படிதல் - சாட்சியாயிருத்தல்
2 பேதுரு 3:18

நாம் தேவனால் உருவாக்கப்படுகிறோம்.

ஆதியாகமம் 1:27

## தேவன் நம்மை நேசிக்கிறார்.

யோவான் 3:16, ரோமர் 5:8

## பரிசுத்த வேதாகமம்

**என்னே பெரிய அன்பு**

தேவன், தம்முடைய ஒரேபேறான
குமாரனை விசுவாசிக்கிறவன்
எவனோ அவன்
கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை
அடையும்படிக்கு, அவரைத்
தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில்
அன்புகூர்ந்தார்

யோவான் 3:16

இவ்வுலக வாழ்விற்குப்பின் நாம் பரலோகம் சென்றடைய வேண்டும் என்பது தேவனின் நோக்கம்

1 தீமோத்தேயு 2:4



## இறைவனின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்மை நேசிக்கிறார்,



நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்வதற்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்....

எபேசியர் 5:2, தீத்து 2:14

அவராலேயன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை ; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறு ஒரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை.

அப்போஸ்தலர் 4:12

# எல்லாரும் பாவம் செய்து

தேவமகிமை (பரிசுத்தம்) அற்றவர்களானோம் ரோமர் 3:23

நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். பாவம் நமக்கும்,

1 யோவான் 3 : 4

தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது

ஏசாயா 59:1-2




## பாவத்தின் சம்பளம் மரணம்;

தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் ரோமர் 6:23

## பாவத்திற்குத் தண்டனை, இரண்டாம் மரணம் எனப்படும் அக்கினிக்கடல் (நரகம்)

வெளி 21:8, 20:11-15



அது அழுகையும், பற்கடிப்பும் மாறாத இடம் மத்தேயு 13:41,42

# இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்.

## மனிதனின் பிரச்சனை



### ஒரு பாவ இருதயம்

பாவமான எதுவும் இறைவனின் பரிசுத்த வாசஸ்தலத்தில் பிரவேசிப்பது கூடாத காரியம். வெளி 21:27

நம் நன்னடத்தையாலும், நல்லெண்ணங்களாலும் ஒரு பாவத்தைக் கூட கழுவி விட முடியாது.

ஏசாயா 64:6

நம்மை நாமே இரட்சித்துக் கொள்வது கூடாத காரியம்.

தீத்து 3:5; எபேசியர் 2:8,9

நம் பாவங்களைக் கழுவி, தேவனிடத்தில் சேர்க்கக் கூடிய உலக ரட்சகராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே நமக்கு அவசியம். 1 பேதுரு 3:18

தேவன் ஒருவரே; தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.


1 தீமோத்தேயு 2:5,6

அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார்; அவரிடத்தில் பாவமில்லை.

1 யோவான் 3:5

இயேசு, நம்முடைய பாவங்களுக்குரிய தண்டனையாகிய மரணத்தை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டார்.

யோவான் 10:11,18



நாம் பாவிகளானபடியினால், தண்டனைக்குரியவர்களாயிருக்கிறோம். பாவம் அறியாத அவர், நமக்குண்டான தண்டனையை ஏற்றுக் கொண்டார். 2 கொரிந்தியர் 5:21

ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.

1 பேதுரு 3:18


கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் (இயேசு) விழப்பண்ணினார்.

ஏசாயா 53:6; பேதுரு 2:24



அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். 1 கொரிந்தியர் 15:3-4

## இயேசு உயிர்த்தெழுந்தார்



"நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கும் அதிகமான சகோதரருக்கு ஒரே வேளையில் தரிசனமானார்..."

1 கொரிந்தியர் 15:3-6

உயிர்த்தெழுந்த பின்பு, பத்து முறைக்கு மேலாக பலருக்குத் தரிசனமாகி நாற்பதாவது நாளில் பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

அப்போஸ்தலர் 1:3

## "நான் மறுபடியும் வருவேன்"

என்று யோவான் 14:3ல் இயேசு வாக்களித்துள்ளார்.

இயேசுவை விசுவாசிக்கிறவனெவனும் சரீரத்தில் மரித்தாலும், அவர் இரண்டாந்தரம் தரிசனமாகும் போது, என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான். யோவான் 11:24-26; எபிரேயர் 9:28

# மனந்திரும்ப வேண்டும் என்று எங்குமுள்ள எல்லா மனுஷருக்கும் கட்டளையிடுகிறார் இறைவன் அப்போஸ்தலர் 17:30

உன் பாவங்களை அறிக்கை செய்

தேவனிடத்தில் திரும்பு







தேவன் தன் விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கொண்டு, உன் இருதயத்தைப் பாவம் நீங்க சுத்திகரிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

1 யோவான் 1:9

இறைவனின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" 1 யோவான் 1:7,வெளி 1:5

"இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது.

எபிரேயர் 9:22

## உன் பாவங்களை விட்டுவிடு

துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிறார்.

ஏசாயா 55:7

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதிமொழிகள் 28:13



**இயேசு சொல்கிறார்:**

"... நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். (நரகத்திற்குச் செல்வீர்கள்)" **லூக்.** 13:3,5

## மனந்திரும்புதல் என்பதாவது :

1. பாவங்களுக்காக மனஸ்தாபப்படுதல். 2 கொரி 7:10
2. பாவங்களை அறிக்கை செய்தல். 1 யோவான் 1:9
3. தேவனிடத்தில் திரும்புதல். ஏசாயா 55:7
4. பாவங்களை விட்டுவிடுதல்.

நீதிமொழிகள் 28:13

## பிறகு

உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டு, உன் இருதயம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டிருக்கும்.

1 யோவான் 1:7,9



## ஒரு தூய்மையான இருதயம்

வேதம் சொல்கிறது என்னவென்றால்,
இறைவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மனம் திரும்பி, தேவனிடத்தில் சேருகிறவனுக்குத் தேவன் நித்திய வாழ்வளிப்பார்.

அப்போஸ்தலர் 20:21

## இயேசு உன் இதயக் கதவைத் தட்டுகிறார். இயேசு உன் இதயத்திலும், உன் வாழ்விலும் பிரவேசிக்க விரும்புகிறார்.

வெளி 3:20

### இயேசு உன் இதயக் கதவைத் தட்டுகிறார்.



**இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்.**

வெளி 3:20

### அவரை அழைத்துக் கொள்

இயேசு உன் இதயத்தில் குடி கொண்டு, உன் வாழ்க்கையை வழி நடத்த வரவேண்டுமென்று அவருக்கு அழைப்பு விடு.

### மாதிரி ஜெபம்

**தேவனாகிய கர்த்தாவே! என் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் இதயத்தைப் பாவமற கழுவியருளும். இறைவன் இயேசுவே! என் இதயத்தில் குடிகொண்டு, என் வாழ்க்கையை வழிநடத்தும். நன்றி தேவனே!**

### பிறகு விசுவாசி

இறைவன் உன்னை மன்னித்து, உன் இருதயத்தை சுத்திகரித்து விட்டார் என்றும் (1 யோவான் 1:9) இறைவனின் ஆவி உன் உள்ளத்தில் ஊற்றப்பட்டு, உன் வாழ்வில் வெளிப்படுகிறது என்பதையும் விசுவாசி.

(வெளி 3:20)


''நான் உன்னை விட்டு விலகுவது மில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை'' என்பது இறைவனின் வாக்குத்தத்தம் (எபிரேயர் 13:5)

பொய்யுரைப்பது இறைவனால் **கூடாத காரியம்** என்பதால் அவர் மேல் முழு நம்பிக்கை வைப்போம்.
(எபிரேயர் 6:18, தீத்து 1:2)



## இயேசுவை உன் இதயத்தில் வாசம் செய்யும்படி நீ அழைத்தால், அவரின் ஆவி உடனே உன் இதயத்திலும், உன் வாழ்விலும் பிரவேசிக்கும்.

வெளி 3:20 ரோமர் 8:9



'இறைவன் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் எவர்களோ, அவர்கள் நித்திய ஜீவனைப்பெற்று தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள், ஏனென்றால் 'நித்திய ஜீவன்' . இயேசுவில் இருக்கிறது. யோவான் 1:12-13, 1 யோவான் 5:11-13

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் (தேவனுடைய ஆவியில் பிறக்கும் ஆவிக்குரிய பிறப்பு) அவன் தேவனுடைய ராஜ்யத்தில் (பரலோகத்தில்) பிரவேசிக்க மாட்டான்

**யோவான் 3:3-8, யோவான் 4:24**

# ஆவியிலே வளர்ச்சியடையுங்கள்

2 பேதுரு 3:18






இடைவிடாமல் **ஜெபம்** பண்ணுங்கள்

1 தெசலோனிக்கேயர் 5:17



அனுதினமும்
**வேதம்** வாசியுங்கள்.
கொலோசேயர் 3:16
மத்தேயு 4:4
2 கொரிந்தியர் 4:16
1 பேதுரு 2:2
எபிரேயர் 1:1,2
2 தீமோத்தேயு 3:16,17
2 பேதுரு 1:20,21

தவறாமல் **ஆலையத்திற்குச்** செல்லுங்கள்

எபிரேயர் 10:25



# 'கிறிஸ்துவுக்கென்று ஜீவியுங்கள்'

என்றால் :






பரிசுத்த ஆவியின் பெலத்துடன், தேவனின் கட்டளைகளுக்குக் **கீழ்படிந்து** நடத்தல்.

**ஞானஸ்நானம் பெறுதல்,**
மத்தேயு 28:18-20

ஆவியில் நிறைந்திருத்தல்
எபேசியர் 5:18

இயேசுவைப் பற்றி மற்றவருக்குச் **சொல்லுதல்**
அப்போஸ்தலர் 1:8

## அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடப்போம்!
## (பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தோடு தினமும் வாழுங்கள்)

1 யோவான் 1:7

தேவன் ஒளியாயிருக்கிறார் (பரிசுத்தராயிருக்கிறார்), அவரில் எவ்வளவேனும் இருளில்லை (பாவமில்லை). நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே (பாவத்திலே) நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி (தேவனின் வார்த்தை படி) நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். 1 யோவான் 1:5-7, 1 பேதுரு 1:15-16.



பாவமானது தேவனோடுள்ள ஐக்கியத்தை தகர்த்துவிடும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டு, பாவங்களை விட்டு விலகினால், தேவன் நம்மை மன்னிப்பார். தேவனுடைய குமாரன் இயேசுவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் நம்மைக் கழுவி, பரிசுத்த தேவனோடுள்ள ஐக்கியத்தை மீட்டுத் தரும். 1 யோவான் 1:5-7,9.



**ஒளியில் நடக்க (பரிசுத்த ஜீவியம் செய்ய) தேவன் எப்படி நமக்கு உதவுவார்? தேவன் நாம் ஒளியில் நடக்க (பரிசுத்த வாழ்க்கை வாழ) உதவி செய்கிறார். இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் அளவிடற்கரிய கிருபையை நமக்குத் தந்து, அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்குகந்த வாழ்க்கை வாழ தேவன் தாமே அருள் புரிகிறார். மனுஷன் தன் சுயபெலத்தால் இறைவனுக்குகந்த வாழ்க்கை வாழ்வது கூடாத காரியம். ரோமர் 5:1,2, 2 கொரிந்தியர் 9:8, 2 கொரிந்தியர் 12:9,10 ரோமர் 6:14, யோவான் 15:5.**



### 1. அன்றாட வாழ்க்கை

வேத வாசிப்பு, ஜெபம், தேவனுடைய ஆவியின் பெலத்துடன் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் ஆகியவற்றின் மூலம் அனுதினமும் பரிசுத்த இறைவனோடு நமக்குள்ள ஐக்கியத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். 1 பேதுரு 1:22

### 2. இப்படி நடந்தால்...

நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டப் பின் பாவம் செய்தால், நம்மை மன்னிக்குமாறு உடனடியாக இயேசுவிடம் விண்ணப்பம் செய்து அப்பாவத்தை விட்டு விலக வேண்டும். மறுபடியும் அப்பாவத்தைச் செய்யாமல் இருக்க இயேசுவின் அருள் வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும்.

### 3. மேலும்...

தேவனோடு நமக்குள்ள ஐக்கியம் நெகிழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமென்றால், மனுஷரோடு நமக்குள்ள ஐக்கியக் குறைவுகளை நிறைவு செய்ய வேண்டும்.

நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் (பாவ வாழ்வு வாழாமல்) ஜீவ **ஒளியை** அடைந்திருப்பான். யோவான் 8:12

நீங்கள் **ஒளியின்** பிள்ளைகளாகும்படிக்கு, **ஒளியினிடத்தில்** விசுவாசமாயிருங்கள். யோவான் 12:36

நீங்கள் உலகத்திற்கு **வெளிச்சமாயிருக்கிறீர்கள்.** மத்தேயு 5:14

**வெளிச்சத்தின்** (தேவனின்) பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள் (வாழ்க்கை நடத்துங்கள்). எபேசியர் 5:8.

# 'பரலோகத்திற்குச் செல்லும் பாதை' என்ற இச்சிற்றேட்டை உபயோகிப்பதெப்படி?

**1. இச்சிற்றேட்டின் மேலாய்வு**

அ. இச்சிற்றேடு ஐந்து வண்ணங்களில் நற்செய்தியை விளக்குகிறது. ஒவ்வொரு வண்ணமும் ஒரு நற்செய்தி நாலைக் குறிக்கிறது.

ஆ. சிற்றேட்டின் சுருக்கம் 3ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி எடுத்துரைப்பவருக்காக எழுதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **மஞ்சள்** பகுதி | பரலோகத்தையும், தேவன் நம்மேல் கொண்டுள்ள அன்பையும் குறிக்கிறது. பக்கம் 4,5 |
| **கறுப்புப்** பகுதி | பாவத்தையும், தண்டனையையும் குறிக்கிறது. பக்கம் 6,7 |
| **சிவப்புப்** பகுதி | பக்கம் 8,9ல் நம் பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததையும், பின்பு உயிர்த்தெழுந்ததையும் பக்கம் 10,11ல் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களுக்கு மன்னிப்பையும் குறிக்கிறது. |
| **வெள்ளைப்** பகுதி | இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் தூய்மையாக்கப்பட்டு, நித்திய வாழ்வடைவதைக் குறிக்கிறது. பக்கம் 12,13 |
| **பச்சைப்** பகுதி | ஆவியிலே வளர்ச்சியடைந்து கிறிஸ்துவுக்காய் ஜீவிப்பதையும் (பக்கம் 14,15), தேவனோடு உறுதியான ஐக்கியம் கொண்டு ஒளியில் நடப்பதையும் குறிக்கிறது. பக்கம் 16,17 |

இ. (பக்கம் 4-13ல் உள்ள நற்செய்தி கொடுக்கப்பட்டபின்) நற்செய்தியைக் கேட்பவர்கள், அதனைத் தெளிவாக புரிந்துகொள்ளும்படியாக நற்செய்தியின் முக்கியக் கருத்துக்களை அழுத்தமாக கூறும் 3 மதிப்பாய்வுகளைக் கொடுக்க வாய்ப்புள்ளது.

1. **மதிப்பாய்வு - முன்பக்க அட்டை**
2. **இரண்டாவது** மதிப்பாய்வு  பின்பக்க அட்டை
3. **மூன்றாவது** மதிப்பாய்வு  பக்கம் 3. இது எடுத்துரைப்பவருக்கு மேலாய்வாகவும் பயன்படும்.

**'பரலோகத்திற்குச் செல்லும் பாதை' என்ற இச்சிற்றேட்டை பயன்படுத்தும் முறை.**

**முதலில்** 'பரலோகத்திற்குச் செல்லும் பாதை' என்ற இச்சிற்றேட்டின் தலைப்பைக் கூறவும். பிறகு பக்கம் 4ல் கொடுக்கப்பட்டுள்ள செய்தியை விவரிக்கவும்.

**பக்கம் 6,7** "எல்லோரும் பாவம் செய்துள்ளோம். பாவத்திற்குத் தண்டனை நித்திய



அக்கினிக் கடல்" என்று சொல்லவும்.

**பக்கம் 8,9** "தேவன் நாம் வேதனைப்படுவதை விரும்பவில்லை. நம்முடைய பாவங்களுக்காக மரணமடைய இயேசுவை அனுப்பினார். நாம் பாவம் செய்துள்ளபடியால், அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என்றாலும், பாவமில்லாத இயேசு, நம்முடைய பாவங்களுக்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்." என்று சொல்லிவிட்டு பிறகு இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் சித்தரிக்கவும்.

**மனிதனின் பிரச்சனை** - அவன் பாவ இருதயம். முயன்ற அளவு சான்றோராய் இருப்பதனாலோ, பிறருக்கு தானங்கள் பல செய்வதனாலோ, பக்தி சிரத்தோடு வாரம் தோறும் ஆலயம் செல்வதனாலோ, நம்முடைய ஒரு பாவத்தைக் கூட நாம் கழுவி விட முடியாது. சுய முயற்சியால் நம்மை நாமே இரட்சித்துக் கொள்வது கூடாத காரியம். எனவே, நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட இறைவன் இயேசு நமக்கு நிச்சயம் தேவை.

**பக்கம் 10,11** - நாம பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால், இறைவன் கட்டளையின்படி மனந்திரும்ப வேண்டும். நாம் மனந்திரும்பவில்லையென்றால் அழிந்து (அக்கினிக் கடலில் தள்ளப்பட்டு) போவோமென்கிறார் இயேசு; லூக்கா 13:3,5. மனந்திரும்புதல் என்றால், பாவங்களை அறிக்கை செய்து, எல்லா பாவங்களையும் விட்டு விலகி, தேவனிடத்தில் திரும்ப வேண்டும் என்று அர்த்தம். அப்பொழுது நம் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு, கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நம் இருதயங்கள் கழுவப்படும்.

**பக்கம் 12,13** - இயேசு நம் இதயக்கதவுகளைத் தட்டுகிறார். அவர் நம் உள்ளத்திலும் வாழ்விலும் வாசம் செய்ய விரும்புகிறார். இறைவன் இயேசுவை நம் உள்ளத்தில் வரும்படி நாம் அழைத்தால், உடனே அவருடைய ஆவி நம் வாழ்வில் ஒன்றி நமக்கு நித்திய வாழ்வைத் தரும். வெளிப்படுத்தின விசேஷம் 3:20, 1 யோவான் 5:11,12.

**முதல் மதிப்பாய்வு** - முன்பக்க அட்டை: இறைவன் இயேசு நம் இதயங்களில் வாசம் செய்தால் நம் பாவங்கள் மன்னிக்கப்படும். மேலும் இவ்வுலகை விட்டு நாம் கடந்து செல்லும்போது பரலோகத்தினுள் பிரவேசிப்போம். உலகத்திற்கும், பரலோகத்திற்கும் இடையே 'இரட்சிப்பு' என்ற பாலம் அவசியம். இறைவன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை பலியிட்டு, நம் பாவங்களைக் கழுவச் செய்ததன் மூலம் தேவன் பாவிகளாகிய நாமும் அவருடைய பரிசுத்த வாசஸ்தலத்தை அடைவதற்கான ஒரே வழியை செவ்வை படுத்தியுள்ளார். 'இரட்சிப்பு' தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. எபேசியர் 2:8,9

**அந்த இரண்டு மனிதர்கள் (மஞ்சள்)** - இயேசுவை விசுவாசித்து, தங்கள் பாவங்களை அறிக்கைச் செய்தபடியால் அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன. அவர்களுக்கு நித்திய வாழ்வு கிடைத்துவிட்டபடியால், இரட்சிப்பாகிய பாலத்தைக் கடந்து பரலோகத்தை நோக்கிச் செல்கிறார்கள். யோவான் 3:16

**பாவம் நிறைந்த மனிதன் (சாம்பல் நிறம்)** - தன் பாவங்களை பரலோகத்தினுள் கொண்டுச் செல்ல முடியாது. தேவனின் வாசஸ்தலம் பரிசுத்தமானது. பாவத்திற்குப்

பரலோகத்தில் இடமில்லை. வெளி 21:27. பாவியான அந்த மனுஷன் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, தன் பாவங்களை அறிக்கைச் செய்தால் அவன் இரட்சிக்கப்பட்டு : இரட்சிப்பாகிய பாலத்தைக் கடந்து பரலோகம் நோக்கிச் சென்று கொண்டிருப்பான். அப்போஸ்தலர் 16:31. அப்பாவியான மனுஷன் இரட்சிப்பென் னும் பாலத்தைக் கடக்காமலிருந்தால், அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுவான். பிதாவினிடத்திற்குச் செல்ல நானே வழி. என்னாலேயல்லாமல் வேறு வழி இல்லை' என்கிறார் இயேசு. யோவான் 14:6

**இரண்டாவது மதிப்பாய்வு** - பின்பக்க அட்டை : மத்தேயு 7:13, 14ல் வாழ்வில் இரண்டே வழிகள் தான் உள்ளன என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அக்கினிக் கடலுக்குப் போகிற விசாலமான வழி, அடுத்தது பரலோகத்திற்குப் போகிற இடுக்கமான வழி. மனுஷர் அனைவரும் (சாம்பல் நிறம்), அழிவை (நரகத்தை) நோக்கிச் செல்லும் விசாலமான வழியில் நடக்கிறார்கள். ஏனென்றால் நாமெல்லோ ரும் பாவிகள் ரோமர் 3:23. பாவத்திற்கு தண்டனை மரணம் (இரண்டாவது மரணம், அக்கினிக் கடல், நரகம்) ரோமர் 6:23. வெளிப்படுத்தின விசேஷம் 21:8. அந்த இரண்டு மனிதர்கள் (மஞ்சள்) இடுக்கமான வழியைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இறைவன் இயேசுவை விசுவாசித்து, தங்கள் பாவங்களை அறிக்கை செய்துவிட்டதால், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன. 1 யோவான் 1:9. இவ்விருவரும் இறைவன் இயேசுவைத் தங்கள் உள்ளங்களில் வரும்படி அழைத்து நித்திய வாழ்வைப் பெற்றுக் கொண்டதால் பரலோகத்திற்குச் செல்லும் இடுக்கமான பாதை வழியே செல்கிறார்கள்.

**நீயும் இடுக்கமான வழியைத் தெரிந்து கொள்வாயா ?**

யாரும் இக்கேள்விக்கு மறுமொழி கூறாமல் இருந்தாலோ அல்லது ஓரிருவர் இடுக்கமான பாதையைத் தெரிந்து கொள்வதாகக் கூறினாலோ "நாம் இடுக்கமான பாதையைத் தெரிந்து கொண்டால், ஜெபத்தின் மூலம் இயேசுவிடம் பேசுவோம்" என்று கூறவும்.

**பக்கம் 12ல் உள்ள** 'மாதிரி ஜெபத்தை வாசிக்கவும்.' தேவனாகிய கர்த்தாவே ! என் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் இதயத்தைப் பாவமற கழுவியருளும். இறைவன் இயேசுவே ! என் இதயத்தில் குடிகொண்டு, என் வாழ்க்கையை வழிநடத்தும். நன்றி தேவனே."

"இந்தச் ஜெபம் உங்கள் உள்ளத்தின் வாஞ்சையை வெளிப்படுத்துகிறதா ?" என்று கேட்கவும். அவர்கள் "ஆம்" என்று மறுமொழி கூறினால் இயேசுவிடம் தங்கள் பாவங்களை மன்னித்து, தங்கள் உள்ளங்களில் வாசம் செய்யவேண்டு மென்று ஜெபிக்குமாறு கூறுங்கள். மேலும் அவர்களிடம் அத்தருணத்திலேயே ஜெபிக்க விரும்புகிறார்களா ? என்று கேட்கவும். மீண்டும் "ஆம்" என்று கூறினால், தங்கள் சொந்த வார்த்தைகளில் இயேசுவிடம் தங்கள் பாவங்களை மன்னித்து, தங்கள் உள்ளங்களில் வாசம் செய்ய வரும்படி கேட்டு ஜெபிக்கும்படி ஊக்குவியுங் கள். அவர்கள் தலைவணங்கி, கண்களை மூடிக்கொள்ளலாம் ரோமர் 10:13

கூடுமான வரை ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வார்த்தைகளில் ஜெபிக்கும் படி கேட்டுக் கொள்ளுங்கள். ஜெபிக்க அவர்களுக்கு உதவி தேவைப்பட்டால், மாதிரி ஜெபம் அவர்களுடைய உள்ளத்தின் வாஞ்சையை வெளிப்படுத்தும்



வகையில் இருந்தால், அந்த ஜெபத்தையே உபயோகிக்கலாம். அவர்கள் ஜெபித்து முடித்ததும், "யாரிடம் இப்போது ஜெபித்தீர்கள் ?" என்று கேட்கவும். இந்தக் கேள்விக்கு, அவர்கள் விடைகூற முடியவில்லையென்றால், நீங்கள் கொடுத்த செய்தி அவர்களுக்குப் புரியவில்லை என்று தான் அர்த்தம். இந்நிலை ஏற்பட்டால் மதிப்பாய்வு கொடுக்கப்பட்டுள்ள பக்கங்களில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தி இரட்சிப்பின் பாதையை மீண்டும் அவர்களுக்கு விளக்கவும். ஏனென்றால் உங்களைப்பற்றி ஜெபிப்பதைவிட தாங்கள் என்ன செய்கிறோம் என்று புரிந்து கொள்வது மிகவும் அவசியம். தங்கள் இருதயத்தின் வாஞ்சையை தாங்களே தெளிவாக இயேசுவிடம் வெளிப்படுத்துதல் இரட்சிப்பிற்கு அவசியமானதொன்று ரோமர் 10:13.

'இயேசுவிடம் என்ன கேட்டீர்கள் !' என்ற கேள்விக்கு அவர்கள் இயேசு தங்கள் பாவங்களை மன்னித்து, தங்கள் உள்ளங்களில் வாசம் செய்ய வரும்படி அழைத்தோம் என்று பதில் கூறினால் நீங்கள் அவர்களை இரட்சிப்பின் நிச்சயத்திற்கு வழிநடத்துவது **மிகவும் அவசியம்.**

சர்வவல்லவரின் வார்த்தைகளடங்கியது தான் வேதம் என்றும், அதை முழுவதும் நம்புவது அவசியம் என்றும் அவர்களுக்குத் தெளிவாக விளக்குவது நமது கடமை.

பாவ மன்னிப்பைப் பொருத்தவரை, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெறும்படி அவர்களை வழிநடத்துவது அவசியம். பக்கம் 8ல் உள்ள கறுப்பு நிற இருதயத்தையும், பக்கம் 11ல் உள்ள வெள்ளை நிற இருதயத்தையும் அவர்களுக்குக் காண்பித்து, அவர்களின் இருதயம் தற்போது எதை ஒத்திருக்கிறது என்று கேளுங்கள். அவர்கள் கறுப்பு நிற இருதயத்தைச் சுட்டிக் காட்டினால், தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, விட்டுவிடுகிறவர்களுக்குத் தேவன் பாவமன்னிப்பைத் தருகிறார் என்பதை மீண்டும் விவரிக்க வேண்டும். இயேசு தங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்பதால், தங்கள் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்கள் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வார்கள் என்ற 1 யோவான் 1:9ல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் மனதில் பதியும்வரை திரும்பத் திரும்ப வாசிக்கும்படி செய்யவேண்டும்.

**தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார்** - பக்கம் 12. "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" எபிரேயர் 13:5 இயேசு நம்மை விட்டு விலகவும் மாட்டார், கைவிடவும் மாட்டார் என்று அவர்கள் உறுதியாக நம்பச் செய்யவேண்டும்.

**பக்கம் 14,15 - வேதத்தை அனுதினமும் வாசிப்பதன்** மூலம் நாம் ஆவியில் **வளர்ச்சியடைவோம்.** மத்தேயு 1:8ல் தொடங்கி அந்த அத்தியாயத்தின் முடிவு வரை வாசிக்கவும் வாசிக்கும் போது இடையில் எதையும் விட்டுவிடவேண்டாம். புதிய ஏற்பாட்டை முடித்தவுடன், பழைய ஏற்பாட்டில் ஆதியாகமத்திலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து வாசித்துக் கொண்டே வரவேண்டும். பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது புதிய ஏற்பாட்டையும் சேர்த்து வாசிப்பது சிறந்தது. தினமும் பழைய ஏற்பாட்டில் ஒரு அத்தியாயமும், புதிய ஏற்பாட்டில் ஒரு அத்தியாயமுமாக தொடர்ந்து வாசித்தால், வேதத்தை முழுமையாக படித்து முடிக்கலாம். திரும்பத்

திரும்ப இம்முறையில் வேதத்தை வாசித்துக் கொண்டேயிருங்கள்.

தினமும் ஸ்தோத்திரத்தோடு கூடிய **ஜெபத்தை ஏறெடுங்கள்.** காலையில் எழுந்தவுடன், நம்மை பாவத்திற்கு தப்புவித்து, ஆபத்திலிருந்து விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுங்கள். சோதனைகளை மேற்கொள்ளவும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் பெலன் வேண்டி ஜெபியுங்கள். இரட்சிக்கப்படாத நண்பர்களும், உறவினர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று மன்றாடி ஜெபியுங்கள்.

இறைவனை தொழுது கொள்வதற்காகவும், வேதத்தில் அடங்கியிருக்கும் சத்தியங்களை மேலும் தெரிந்துகொள்வதற்காகவும், சக விசுவாசிகளோடு ஐக்கியத்தை மேலும் தெரிந்து கொள்வதற்காகவும், சக விசுவாசிகளோடு ஐக்கியத்தை வளர்த்துக் கொள்வதற்காகவும் நாம் **தவறாமல் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் தேவனுக்கென்று வாழ்வதென்றால்,** பரிசுத்த ஆவியின் உதவியோடு **தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்** என்று தான் அர்த்தம். நாம் ஞானஸ்நானம் பெறவேண்டும். மத்தேயு 28:18-20. இயேசு நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவேண்டுமென்று கட்டளையிடுகிறார். எபேசியர் 5:18 இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதால் கிடைக்கும் இரட்சிப்பைப் பற்றி **பிறருக்கு அறிவிக்க வேண்டும்.**

**பக்கம் 16,17** தேவனோடும், நம்முடன் இருப்பவர்களோடும் நிலையான ஐக்கியம் வைத்துக்கொள்வதன் மூலம், தேவன் ஒளியிலிருப்பது போல நாமும் ஒளியிலிருக்க முயல வேண்டும். 1 யோவான் 1:5-9. இருளிலே நடப்பதென்றால் பாவத்தில் வாழ்வதென்று பொருள். நாம் பாவங்களை அறிக்கை செய்து, பாவங்களை விட்டு விலகி நடந்தால் ஒளியில் நடப்பவர்களாயிருப்போம்.

**மூன்றாவது மதிப்பாய்வு** - பக்கம் 3: இத்தருணத்தில் நாம் இதுவரை அறிவித்த சத்தியத்தின் கருத்தைக் கொடுக்கலாம்.

**மஞ்சள் பகுதி** - பக்கம் 3: இந்தச் சிற்றேடு தேவனின் **அன்பைச்** சித்தரிக்கிறது. தேவன் பரலோகத்தை நமக்காக ஆயத்தம் செய்துள்ளார். அது பரிசுத்தமானதும், ஆனந்தம் நிறைந்ததுமான இடம்.

**கறுப்புப் பகுதி** - நாமெல்லோரும் பாவம் செய்ததால் பரலோகத்தில் பிரவேசிக்கும் தகுதியை இழந்து விட்டோம். அக்கினிக் கடலுக்குச் செல்லப் போகிறோம்.

**சிவப்புப் பகுதி** - இயேசு நமது பாவங்களுக்காக உயிர் கொடுத்ததால், நாம் அவரை விசுவாசித்து நம் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டால், அவர் நம்மை மன்னித்து பாவமற நம்மைக் கழுவுவார்.

**வெள்ளைப் பகுதி** - இயேசு கிறிஸ்துவை நம் வாழ்வில் ஏற்றுக் கொண்டால், தேவ ஈவுகளாகிய பரிசுத்தமாக்கப்படுதலையும், நித்திய வாழ்வையும் பெற்றுக் கொள்வோம். தேவனுடைய வல்லமையால் நரகத்திலிருந்து மீட்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்லும் தகுதி பெற்றோம்.



**பச்சைப் பகுதி** - **வேதம்** வாசித்தல், **ஜெபித்தல், ஆலயத்திற்குச்** செல்லுதல், தேவனின் கட்டளைகளுக்குக் **கீழ்படிதல்,** விசுவாசத்தினால் கிடைக்கும் தேவ ஈவாகிய இரட்சிப்பைப்பற்றி பிறருக்கு **அறிவித்தல்** ஆகிய இச்செயல்களின் மூலம் நாம் ஆவியில் வளர்ச்சியடைவோம்.

நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தியவர்கள் விசுவாசத்தில் நிலைநிற்கும் வரை, அவர்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கும் பணியை **புறக்கணிக்க வேண்டாம்.** வாரா வாரம் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ, அல்லது கடிதம் மூலமாகவோ, அல்லது பிறர் மூலமாகவோ அவர்களிடம் தொடர்பு கொண்டு உற்சாகப்படுத்தலாம். பரலோகத்திற்குச் செல்லும் பாதை என்ற இச்சிற்றேட்டைப் பயன்படுத்தி பலரை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்த தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மலேசியா விசுவாச ஊழியம்**


இரண்டு வழிகள் தான் உள்ளன. ஒன்று
விசாலமான வழி, அடுத்தது இடுக்கமான வழி
மத்தேயு 7:13,14
நாமெல்லாரும் கேட்டுக்குப் போகிற விசாலமான
வழியில் நடந்துக் கொண்டிருக்கிறோம்.
ரோமர் 3:23, 6:23
அழிவு
வாழ்வு
பாவம்
பாவம்
பாவம்
பாவம்
பாவம்
பரலோகம்
இடுக்கமான வழி
ஜீவனை (பரலோகத்தை)
நோக்கிச் செல்கிறது.
அந்த இடுக்கமான
பாதையை அடைய
ஒரே வழி,
இறைவன் இயேசுவிடம்
உன் பாவங்களை
மன்னிக்கும்படி
விண்ணப்பித்து,
அவருக்கு உன்
வாழ்விலும்,
இருதயத்திலும்
இடமளிப்பது தான்!
'பிதாவினிடத்திற்குச்
(பரலோகத்திலிருக்கும்)
செல்ல ஒரே வழி நானே;
என்னைத்தவிர
வேறு பாதையில்லை
என்கிறார் இயேசு
யோவான் 14:6
ஜீவனுக்குப் (பரலோகத்திற்குப்) போகிற
இடுக்கமான வழியை தெரிந்துகொள்வாயா?
(12ம் பக்கத்திலுள்ள மாதிரி ஜெபத்தைப் பார்க்கவும்)
நரகம்